**<u>13.02.2024 அ.வ.எண்.37/2014 வா.சா.2, கோட்டைமுத்து த/பெ. ஜெயராம கவுண்டர் குறுக்கு விசாரணை 1,2 பிரதிவாதிகள் தரப்பு</u>**

இந்த வழக்கை யார் யாருக்கு எதிராக தாக்கல் செய்தது என கேட்டால் முத்தியாலு என்பவர் முருகன் என்பவருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார். வேறு யாருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியாது. எனக்கு எதிராகவும் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என கேட்டால் அது விவரம் எனக்கு தெரியாது. முத்தியாலு சொல்லி அழைத்ததால் சாட்சி சொல்ல வந்தேன். அவர் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என கேட்டால் தெரியாது. வழக்கு போட்டுள்ள சொத்தின் புல எண்.58/1ஏ மற்றும் 58/1பி ஆகும். மேற்படி 2 புல எண்களும் 20 செண்ட் ஆகும். அந்த 20 செண்டும் தனக்கு சொந்தமென வாதி வழக்கிட்டுள்ளார். அந்த சொத்து ஆதியில் கங்கெம்மாள் என்பவருக்கு சொந்தமானது. அந்த சொத்து வாதியின் தந்தை கிரயம் வாங்கிய வகையில் வாதிக்கு சொந்தம். வாதியின் தந்தை 1954-ல் கிரயம் வாங்கினார். 20 செண்டும் ஒரே கிரயமாக வாங்கப்பட்டது. அந்த கிரயம் பதிவு செய்யப்பட்டதா என கேட்டால் பதிவு செய்யப்பட்டதுதான். மேற்படி 20 செண்டில் எனது தந்தை கிரயம் வாங்கிய 5 செண்ட் எனக்கு சொந்தமானது. என் தந்தை 1971-ல் கிரயம் வாங்கினார். அந்த கிரய ஆவணத்தை வழக்கில் தாக்கல் செய்தேனா என கேட்டால் வாதியிடம் கொடுத்தேன். கூட்டு பட்டாவை இரத்து செய்த விவரம் எனக்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு தெரியும். நகல் வாங்கி பார்த்தபோது என் பெயர் வரவில்லை. அந்த பட்டா ஆதிமூலம் மகன் கண்ணன் என்பவர் பெயரிலும் கூட்டு பட்டாவாக இருந்து பின்னர் என் பெயரிலும் கூட்டு பட்டாவாக ஆனது. அதில் எனது பெயரும், கண்ணன் பெயரும் 1-ம் பிரதிவாதி பெயரும் இருந்தது. அந்த பட்டா எண் ஞாபகம் இல்லை. அந்த கூட்டு பட்டாவையும் வாதியிடம் கொடுத்தேன். கூட்டு பட்டா இரத்து செய்யப்பட்டதை ஆட்சேபித்து மூன்று வருடத்திற்கு முன்னர் மனு கொடுத்தேன். அதன் பேரில் நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை. வாதியின் தந்தையிடமிருந்து நேரடியாக வாதிக்கு கிடைத்தது. பாகபிரிவினை ஏதும் இல்லை. வாதி அவரது அண்ணனிடமிருந்து 8 செண்ட் கிரயமும் பெற்றுள்ளார். வழக்கு சொத்து 1-ம் பிரதிவாதி அனுபவத்தில் உள்ளது என்றால் யாருடைய அனுபவத்திலும் இல்லை. அந்த சொத்து எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து பயிர் செய்யாமல் கரம்பாகதான் உள்ளது. வழக்கு சொத்து நிபந்தனை ஒப்படைவு செய்யப்பட்ட சொத்து என்றும் அதனை நிபந்தனையை மீறி வாதியின் தந்தையும் என் தந்தையும் கிரயம் வாங்கியதால் எங்கள் பெயரில் பட்டா ஏற்படவில்லை என்றும் சொன்னால் - சாட்சி பதில் அளிக்கவில்லை. வழக்கு சொத்து நிபந்தனை ஒப்படைவுக்கு உட்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியும் என்றும் அதனால்தான் நான் இந்த வழக்கை நடத்தவில்லை என்றும் சொன்னால் அது சரியல்ல.